




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 294 | 4 Pages | 21.5.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 294 | 4 பக்கங்கள் | 21.5.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |


# ரூ.527.84 கோடி செலவில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள்: மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

சென்னை, மே.21

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்தில் இன்று (20.05.2025) புதன்கிழமை காலை 10.45 மணியளவில்


(1) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 527 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4,978 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 207 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 வணிகவளாகங்களையும்காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கிறார்.

(2) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் சென்னை வெளிவட்ட சாலையில் உள்ள மீஞ்சூர், வெள்ளனூர், வரதராஜபுரம், திருநாகேஸ்வரத்தில் 11.46 கோடி ரூபாய் செலவில் 4 உடற்பயிற்சி பூங்காக்கள் மற்றும் 3.20 கோடி ரூபாய் செலவில் தியாகராய நகரில் சோமசுந்தரம் விளையாட்டு மைதானம் ஆகியவற்றை



திறந்து வைத்து, 255.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

(3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத் துறையின் அமைச்சுப் பணியில் தேர்வு செய்யப்பட்ட சார்நிலை பணியில் செயல் அலுவலர் (நிலை 4), பணியிடத்திற்கு 29 நபர்களுக்கும், தொகுதி4 நிலையிலான இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு 44 நபர்களுக்கும், தட்டச்சர் பணியிடத்திற்கு 24 நபர்களுக்கும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடத்திற்கு 12 நபர்களுக்கும், என மொத்தம் 109 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 16 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குகிறார்.



பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை

எல்லா அறமுந் தரும்

**விளக்கம்:**

ஒருவனுக்கு பொய் இல்லாமல் வாழ்தலை விடப் புகழ் நிலை வேறொன்றும் இல்லை, அஃது அவன் அறியாமலேயெ அவனுக்கு எல்லா அறமும் கொடுக்கும்.

## கேரளாவில் பல்கலைக்கழகங்களுக்கு கவர்னரின் துணைவேந்தர்கள் நியமனம் ரத்து ஐகோர்ட்டு உத்தரவு




திருவனந்தபுரம், மே.21

கேரளாவில் கடந்த ஆண்டு தொழில்நுட்ப பல்கலைக்கழகம், டிஜிட்டல் பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தர்களை நியமனம் செய்ய மாநில அரசு தேர்வு பட்டியலை கவர்னராக இருந்த ஆரிப் முகமது கானுக்கு அனுப்பியது. அந்த பட்டியலை அவர் தவிர்த்து, தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் சிவப்பிரசாத், டிஜிட்டல் பல்கலைக்கழகத்துக்கு டாக்டர் சிசா தாமஸ் ஆகிய 2 பேரையும் தற்காலிக துணைவேந்தர்களாக நியமனம் செய்து உத்தரவிட்டார்.

இவ்வாறு துணைவேந்தர்களை நியமனம் செய்த கவர்னரின் உத்தரவை ரத்து செய்யக்கோரி மாநில அரசு கேரள ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தது. அதில், மாநில அரசு பரிந்துரைத்த தேர்வு பட்டியலை தவிர்த்து, பல்கலைக்கழகங்களுக்கு தற்காலிகமாக துணைவேந்தர்களை கவர்னர் நியமித்து உள்ளார். இதனால் கவர்னர் பல்கலைக்கழக சட்டங்களுக்கு புறம்பாக செயல்பட்டு உள்ளார். எனவே, கவர்னரின் துணைவேந்தர்கள் நியமன உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுவை நீதிபதி சுரேஷ்குமார் தலைமையிலான நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்தது. பல்கலைக்கழகங்களுக்கு தற்காலிகமாக துணைவேந்தர்களை நியமிக்கும்போது, மாநில அரசு வழங்கும் தேர்வு பட்டியலில் இருந்து மட்டுமே நியமனம் செய்ய வேண்டும். 2 துணைவேந்தர்களின் நியமனம் பொறுப்பு இன்றுடன் முடிவடைவதால், இந்த நியமனத்தை மறுபரிசீலனை செய்ய ஐகோர்ட்டு தலையிடவில்லை.

மேலும் கேரள தொழில்நுட்ப பல்கலைக்கழகம், டிஜிட்டல் பல்கலைக்கழகத்துக்கு தற்காலிக துணை வேந்தர்களை நியமனம் செய்த கவர்னரின் உத்தரவை ரத்து செய்து ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

## வக்பு திருத்த சட்டத்துக்கு எதிரான மனுக்கள் மீது விசாரணை




புதுடெல்லி, மே.21

வக்பு திருத்த சட்ட மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. கடந்த 5ந்தேதி ஜனாதிபதி திரவுபதி முர்மு ஒப்புதலுடன் சட்டம் ஆனது. அந்த சட்டத்தை செல்லாது என்று அறிவிக்கக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் தி.மு.க., த.வெ.க. உள்ளிட்ட கட்சிகளும், தொண்டு நிறுவனங்களும் என 70க்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் கடந்த மாதம் 17ந்தேதி நடந்த விசாரணையின்போது 5 மனுக்களை மட்டும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதாக சுப்ரீம் கோர்ட்டு அறிவித்தது. இதனையடுத்து இந்த வழக்கை கடந்த 15ந் தேதி மீண்டும் விசாரித்த நீதிபதிகள், இடைக்கால உத்தரவு குறித்த விசாரணைக்காக 20ந் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

அதன்படி, வக்பு திருத்த சட்டத்துக்கு எதிரான மனுக்கள் மீது இன்று (புதன்கிழமை) விசாரணை நடக்கிறது. தலைமை நீதிபதி கவாய், அகஸ்டின் ஜார்ஜ் மசி ஆகியோரை கொண்ட அமர்வு முன்பு வழக்கு விசாரணை நடைபெறுகிறது. விசாரணை முடிவில் வக்பு திருத்த சட்டம் தொடர்பாக இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பாகிஸ்தான் ராணுவ தளபதி அசிம் முனீருக்கு பீல்ட் மார்ஷல் பதவி



இஸ்லாமாபாத், மே.21

கடந்த 2022 முதல் பாகிஸ்தானின் 11வது ராணுவத் தளபதியாகப் பணியாற்றி வரும் அசிம் முனீருக்கு, பீல்ட் மார்ஷலாக பதவி உயர்வு வழங்கப்பட உள்ளதாக பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம், பீல்ட் மார்ஷல் அயூப் கானுக்குப் பிறகுபாகிஸ்தான்ராணுவவரலாற்றில் இரண்டாவது பீல்ட் மார்ஷல் என்ற பெருமையை அவர் பெறுகிறார்.

இதுதொடர்பாக பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், ஜெனரல் சையத் அசிம் முனீரை பீல்ட் மார்ஷல் பதவிக்கு பதவி உயர்வு அளிக்க பாகிஸ்தான் மத்திய அமைச்சரவை இன்று (செவ்வாய்க்கிழமை) ஒப்புதல் அளித்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக பாகிஸ்தான் ராணுவ தளபதியாக இருப்பவர் அசிம் முனீர். கடந்த ஏப்., 17ம் தேதி இஸ்லாமாபாத்தில் நடந்த ஒரு பொது நிகழ்ச்சியில் 'இரு நாடு கோட்பாடு' என மத அடிப்படையில் பேசியது பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. அந்த பேச்சு தான் பஹல்காம் தாக்குதலுக்கு தூண்டுகோலாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22 ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது.

இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து இந்தியாபாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்த நிலையில், எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்தது. இந்த தாக்குதல் முயற்சிகளை இந்திய ராணுவம் தொடர்ந்து முறியடித்து வந்தது. இதனைத்தொடர்ந்து நடந்த தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டன.

இருந்தபோதிலும் இந்தியாவுடன் நடந்த சண்டையில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம் என பொய்யான தகவல்களை அந்நாட்டு மக்கள் மத்தியிலும், சர்வதேச ஊடகங்களிலும் பாகிஸ்தான் ராணுவம் பொய்களை பரப்பி வருகிறது. இந்த சூழலில் ராணுவ தளபதி அசிம் முனீருக்கு ' பீல்ட் மார்ஷல்' பதவி உயர்வு வழங்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

## வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த 20 சவரன் தங்கநகை கொள்ளை: பெண் கைது



திருப்பத்தூர், மே.21


திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த வளையாம்பட்டு கிராமத்தில் வசித்து வருபவர் முனுசாமி. இவர் டெய்லராக பணியாற்றி வருகிறார். இவர் கடந்த 16ம் தேதி காலை 11 மணியளவில் இவர் மற்றும் இவரது மகள் சுகந்தி புத்துக்கோவில் பகுதியில் உள்ள கோவிலுக்கு சென்றுள்ளனர். பின்னர் இவரது மனைவி ராஜேஸ்வரி வீட்டை பூட்டி விட்டு பசு மாட்டை மேய்ச்சலுக்கு அழைத்து சென்றுள்ளார்.

கோவிலுக்கு சென்று இருந்த முனுசாமி மற்றும் அவரது மகள் சுகந்தி பிற்பகல் வீட்டிற்க்கு வந்து பார்த்தபோது வீட்டின் உள்புற தாழ்ப்பாள் போடப்பட்டு இருந்தது. பின்னர் பின்பக்க வழியாக உள்ளே சென்று பார்த்தபோது அறை கதவின் பூட்டு உடைக்கப்பட்டு பீரோ திறந்த நிலையில் பொருட்கள் சிதறி கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

மேலும் பின்பக்க வழியாக வீட்டிற்குள் வந்த மர்ம நபர்கள் பீரோவில் இருந்த 20 சவரான் தங்க நகைகள் மற்றும் 14 ஆயிரம் ரொக்கம் கொள்ளை அடித்து சென்று இருப்பது தெரியவந்தது. சம்பவம் குறித்து முனுசாமி கிராமிய காவல்நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து கொள்ளை அடித்த மர்ம நபரை தேடி வந்தனர்.

இந்த நிலையில், முனிசாமியின் பக்கத்து வீட்டில் வசிக்கும் கீதா என்ற பெண்ணை போலீசார் கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் பரபரப்பு தகவல் வெளியானது. அதன்படி, முனிசாமி குடும்பத்தினருடன் வெளியே சென்றிருப்பதை அறிந்த கீதா, அவரது வீட்டின் பின்பக்க கதவை இரும்பு கம்பியால் உடைத்து உள்ளே சென்று 20 சவரன் தங்கநகை மற்றும் 14 ரூபாய் பணத்தை கொள்ளையடித்தது சென்றுள்ளார். கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகையை வாணியம்பாடியில் உள்ள அடகுகடையில் அடகு வைத்து பணம் பெற்றது விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனை தொடர்ந்து கீதாவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வேலூர் பெண்கள் மத்திய சிறையில் அடைத்தனர்.

## கோவிலில் வழிபாடு.. விபூதி அடித்த பூசாரி இளம் பெண் மயங்கி விழுந்து உயிரிழப்பு



மதுரை மே.21

குடும்ப பிரச்னையை தீர்க்க குல தெய்வ கோவிலுக்கு சென்றிருந்த இடத்தில் சாமியாடி தலையில் விபூதி அடித்தபோது 26 வயது பெண் உயிரிழந்தஅதிர்ச்சிசம்பவம்நிகழ்ந்துள்ளது.

கடந்த 40 நாட்களுக்கு முன் இளம் பெண் பிரியாவுக்கு குழந்தை பிறந்த நிலையில், குடும்ப சண்டை காரணமாக அவரது கணவர் கவுதம் குழந்தையை தூக்கிச் சென்றுள்ளார். இந்நிலையில் குல தெய்வ கோவிலில் சமாதானம் பேசிய நிலையில், கவுதமின் தம்பி கவுசிக் சாமியாடி விபூதி அடித்தபோது பிரியா மயங்கி விழுந்து உயிரிழந்தார். 40 நாட்களே ஆன பச்சிளம் குழந்தை, தனது தாயை இழந்து தவித்து வருவது சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவம் குறித்து மதுரை கோட்டாச்சியர் ஷாலினி தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

## ஈரோடு இரட்டை கொலை வழக்கில் சிறப்பாக செயல்பட்ட போலீசாருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டு



சென்னை, மே.21

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

ஈரோடு மாவட்டம், சிவகிரியில் கடந்த 28.04.2025அன்று உச்சிமேடு மேகரையான் தோட்டம் என்ற இடத்தில் தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்த ராமசாமி (72) மற்றும் பாக்கியம் (63) ஆகிய வயதான தம்பதியரை கொலை செய்து சுமார் 10 சவரன் நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்த சம்பவம்;

திருப்பூர் மாவட்டம், அவிநாசிபாளையம், சேமலைக்கவுண்டன்பாளையத்தில் 28.11.2024அன்று இரவு, தெய்வசிகாமணி (78), அவரது மனைவி அலமாத்தாள் (74) மற்றும் அவர்களது மகன் செந்தில்குமார் (44) ஆகியோரை கொலை செய்து, அவர்களிடமிருந்து 5 1/2 சவரன் தங்க நகைகள் மற்றும் ஒரு மொபைல் போன் ஆகியவற்றை கொள்ளையடித்த சம்பவம்;

மேற்படி கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட நபர்களை கைது செய்து, விசாரணை செய்ததில் குற்றவாளிகள் இக்குற்ற சம்பவத்தை ஒப்புக்கொண்டனர். மேலும், இக்குற்றவாளிகள் வேறு சில கொலை, கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இவை குறித்தும் தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்குற்றசம்பவங்களை விரைந்து, புலனாய்வு செய்து குற்றவாளிகளை கைது செய்த, காவல்துறை தலைவர் (மேற்கு மண்டலம்) கோயம்புத்தூர் த. செந்தில்குமார், கோயம்புத்தூர் சரக காவல் துணைத் தலைவர் டாக்டர் வி. சசிமோகன் ஆகியோர் தலைமையிலான புலனாய்வு குழுவில் இடம் பெற்ற ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர்அ.சுஜாதா, பெருந்துறை காவல் உபகோட்ட துணை கண்காணிப்பாளர் ஆர். கோகுலகிருஷ்ணன், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்திற்கு நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தலைமைச்செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், டி.ஜி.பி. சங்கர் ஜிவால், கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) டேவிட்சன் தேவாசிர்வாதம், மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் உடனிருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் ஆய்வு



சென்னை, மே.21

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் இன்று நேரில் சென்று, தென்மேற்குப் பருவமழை தயார்நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்ற தென்மேற்கு பருவமழை ஆயத்த நிலை மற்றும் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு குறித்த ஆய்வுக் கூட்டத்தில், வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை தவறாது

பின்பற்றவும் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் அறிவுரை வழங்கினார். தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பகுதிகளிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் நேற்று பெய்த மழை காரணமாக கே ஆர் பி நீர்த்தேக்கம் மற்றும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில் இருந்து தென்பெண்ணை ஆற்றில் 4,200 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும்தர்மபுரிமாவட்டஆட்சியர்ஆகியோர்மேற்கொண்டுள்ள முன்னேற்பாடுகள் குறித்து அமைச்சர் காணொளி காட்சி மூலம் கேட்டறிந்தார்.

மாநிலஅவசரகாலசெயல்பாட்டுமையத்தின்24மணிநேரமும் இயங்கி வரும் அவசர அழைப்பு மையத்தில், பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்கள் மீது எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைக் கேட்டறிந்த அமைச்சர், புகார்களுக்கு உடனடியாக தீர்வு கண்டு, புகார் அளித்தவர்களுக்கு எடுக்கப்பட்ட மேல்நடவடிக்கை குறித்து தகவல் தெரிவிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# இடைநிலை ஆசிரியர்களை வஞ்சிக்கும் திமுக அரசு : டிடிவி தினகரன்

சென்னை, மே.21

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

பத்தாண்டு பணி காலத்துக்கு முன்பாகவே உச்ச பட்ச சம்பள உயர்வை முடிப்பதா? – ஆயிரக்கணக்கான இடைநிலை ஆசிரியர்களை வஞ்சிக்கும் திமுக அரசின் முடிவு கடும் கண்டனத்திற்குரியது.

தமிழக அரசின் ஊதியக் குழுக்களின் தவறான நிர்ணயத்தால் பணியில் இருந்து ஓய்வு பெற பத்தாண்டு காலம் மீதமிருக்கும் இடைநிலை ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் ஊதிய உயர்வு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டிருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.



காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், சமவேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும் என ஆயிரக்கணக்கான இடைநிலை ஆசிரியர்கள் பல்வேறு கட்ட தொடர் போரட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் அவர்களுக்கான ஊதிய உயர்வை நிறுத்தி வைக்க முடிவு செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

இடைநிலை ஆசிரியர்களின் ஒவ்வொரு போராட்டத்தின் போதும், அவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதும், பின்னர் ஊதிய முரண்பாடுகளை களைய குழு அமைப்பதும் என எந்தவித தீர்வையும் காணாமல் தொடர்ந்து ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு வருவது ஒட்டுமொத்த இடைநிலை ஆசிரியர்களுக்கும் திமுக அரசு இழைக்கும் அநீதி ஆகும்.

எனவே, ஆண்டு ஊதிய உயர்வில் இடைநிலை ஆசிரியர்கள் பாதிக்காத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, ஆண்டுக்கணக்காக போராடி வரும் அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிட முன்வர வேண்டும் என பள்ளிக்கல்வித்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார் .

# நாமக்கல்லில் முட்டை கொள்முதல் விலை மேலும் உயர்வு

நாமக்கல், மே.21

நாமக்கல் மண்டலத்தில் 5 கோடிக்கும் அதிகமாக முட்டை கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இந்த கோழிகள் மூலம் 4 கோடிக்கும் அதிகமான முட்டைகள் தினசரி உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த முட்டைகள் தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

நாமக்கல் மண்டலத்தில் 565 காசுகளுக்கு கோழிப்பண்ணைகளில் முட்டை கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் நாமக்கல்லில்



நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முட்டை விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டது. அதனால் நாமக்கல் மண்டல கோழிப்பண்ணைகளில் இனி 570 காசுகளுக்கு முட்டை கொள்முதல் செய்யப்பட உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

# இலங்கை தமிழர் வழக்கில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வேதனை தருகிறது திருமாவளவன்

சென்னை, மே.21

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்தது தொடர்பான வழக்கு ஒன்றில், 'இந்தியா ஒன்றும் சத்திரமல்ல' என தெரிவித்த சுப்ரீம் கோர்ட்டு, மனுவை தள்ளுபடி செய்தது. சுப்ரீம் கோர்ட்டின் இந்த கருத்துக்கு விசிக தலைவர் திருமாவளவர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.



சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அவர், இது தொடர்பாக பேசியதாவது;

"இலங்கை தமிழர் வழக்கில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு வேதனைதருகிறது. மனிதநேய மாண்பை உடைப்பதுபோல் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு உள்ளது. புலம்பெயர்வது என்பது உலகம் முழுவதும் நடப்பது. இலங்கையில் இருந்து மட்டும் புலம்பெயர்கிறார்கள் எனபது கிடையாது. மனிதாபிமான அடிப்படையில் தஞ்சம் புகுவோருக்கு அடைக்கலம் கொடுப்பது தேசத்தின் கடமை. இந்தியா என்ன சத்திரமா என்று சுப்ரீம் கோர்ட்டு கூறியுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது." என்றார்.

# எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நகல் மதிப்பெண் சான்றிதழ்

சென்னை, மே.21

தமிழ்நாட்டில் கடந்த மார்ச் மாதம் 28ந் தேதி முதல் ஏப்ரல் மாதம் 15ந் தேதி வரை நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வை 4 லட்சத்து 46 ஆயிரத்து 411 மாணவர்கள், 4 லட்சத்து 40 ஆயிரத்து 465 மாணவிகள், 25 ஆயிரத்து 888 தனித் தேர்வர்கள், 272 சிறை கைதிகள் என மொத்தம் 9 லட்சத்து 13 ஆயிரத்து 36 பேர் எழுதினார்கள்.

தேர்வு முடிவுகள் மே 19ந் தேதி வெளியிடப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், 2 நாட்களுக்கு முன்னதாக கடந்த 16ந் தேதியே வெளியிடப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் 93.80 சதவீத மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர். அதாவது, தேர்வு எழுதியவர்கள் 8 லட்சத்து 17 ஆயிரத்து 261 பேர் வெற்றி பெற்றனர்.



இந்த நிலையில், எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நகல் மதிப்பெண் சான்றிதழ் அவர்கள் படித்த பள்ளியிலேயே இன்று வழங்கப்பட்டது. தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் வந்து தங்களது நகல் மதிப்பெண் சான்றிதழை வாங்கிச் சென்றனர். இதைத் கொண்டு அவர்கள் மேல்நிலைப் படிப்புக்கு விண்ணப்பிக்க வசதியாக பள்ளிக் கல்வித்துறை இந்த ஏற்பாட்டினை செய்திருந்தது.

# சாம்சங் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க பேச்சுவார்த்தையில் உடன்பாடு

சென்னை, மே.21

சாம்சங் இந்தியா தொழிலாளர்கள் சங்கத்தால் எழுப்பப்பட்ட ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் நிர்வாகத்தினர் மற்றும் CITU தொழிற்சங்கத்தினர் கலந்து கொண்டனர். இப்பேச்சுவார்த்தையின் முடிவில் சுமூகமான முடிவு ஏற்பட்டது. இருதரப்பும் ஏற்றுக்கொண்டவாறு பின் வரும் முடிவுகள் எடுக்கப்பட்டது. அதன் விபரம்;

தொழிலாளர்களுக்கு 20252026 ஆம் ஆண்டில் ரூ.9,000/ 20262027 மற்றும் 20272028 ஆண்டுகளுக்கு தலா ரூ.4,500/ வீதம் மூன்றாண்டு காலத்திற்கு ரூ.18000/ நேரடி சம்பள உயர்வு தொழிலாளர்களுக்கு கிடைக்கும். அனுபவத்தின் அடிப்படையிலான சிறப்பு ஊதிய உயர்வு மூன்றாண்டு காலங்களில் ரூ.1,000/ முதல் ரூ.4,000/ வரை தொழிலாளர்களுக்கு கிடைக்கும்.



ஒருமுறை சிறப்பு பதவி உயர்வாக 31.03.2025 தேதியில் 6 வருடங்கள் முறையான பணி நிறைவு செய்து பதவி உயர்வு கிடைக்காத தொழிலாளர்களுக்கு (ஆப்ரேட்டர் 1/2/3, டெக்னிசியன் 1/2/3) சிறப்பு பதவி உயர்வு அளிக்கப்படும். கூடுதல் விடுப்பு சலுகைகள், நீண்ட காலம் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு பணி விருது, குளிரூட்டப்பட்ட பேருந்து வசதி உள்ளிட்ட வசதிகள் தொழிலாளர்களுக்கு கிடைக்கும்.

# மக்கள் மருந்தகத்தின் பூட்டை உடைத்து திருட்டு வெளியான வீடியோ

சென்னை, மே.21

சென்னை திருவொற்றியூர் விம்கோ நகரில் உள்ள மக்கள் மருந்தகத்திற்கு இரவு நேரத்தில் பைக்கில் மர்ம நபர்கள் வந்தனர். அவர்கள் பூட்டப்படிருந்த மக்கள் மருந்தகத்தின்பூட்டைஉடைத்து ரூ. 30 ஆயிரம் பணத்தை திருடி உள்ளனர்.

இதனையடுத்து அருகில் இருந்த மளிகைக் கடையையும் உடைக்க முயற்சி செய்துள்ளனர். இந்த சம்பவம் குறித்து தகவலறிந்த எண்ணூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மர்ம நபர்களை பிடிக்க அப்பகுதிகளில் உள்ள சிசிடிவி காட்சிகளை போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.



இந்த நிலையில் மர்ம நபர்கள் கொள்ளையடித்து செல்லும் சிசிடிவி காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பெருங்களத்தூரில் கடும் போக்குவரத்து நெரிசல் வாகன ஓட்டிகள் அவதி

சென்னை, மே.21

சென்னையில் இரும்புலியூர் மேம்பால பகுதியில் நெடுஞ்சாலைத்துறை பணிகள் மந்தமாக நடந்து வரும்நிலையில் சென்னை மார்கமாக வண்டலூர், பெருங்களத்தூரை கடக்கும் வாகனங்கள் அங்குலம் அங்குலமாக ஊர்ந்து செல்கிறது.



சென்னை புறநகரில் மேக மூட்டத்துடன் மிதமான மழை பெய்து வருவதால் பெருங்களத்தூர், முடிச்சூர், வண்டலூர் உள்ளிட்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு உள்ளது. இதனிடையே மழையும் பெய்து வருவதால் வாகன ஓட்டிகள் பெரும் அவதியடைந்தனர். இதனை சீர் செய்யும் பணியில் போக்குவரத்து போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# வணிகவரித்துறையில் புதிய வாகனங்கள்: அமைச்சர் தொடங்கி வைத்தார்

சென்னை, மே.21

அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள் தலைமையில் இன்று (19.05.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி (ம) பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான அனைத்து இணை ஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு முன்னதாக அமைச்சர் வணிகவரித்துறையில் ரூ.2.02 கோடி செலவில் புதிதாக வாங்கப்பட்ட 23 வாகனங்களை அலுவலர்களின் பயன்பாட்டிற்க்காக கொடியசைத்து துவக்கி வைத்தார்



கூட்டத்தில்பேசிய அமைச்சர், கடந்த நிதி ஆண்டில் வரி வருவாய் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து சிறப்பாக செயல்பட்ட ஆணையர் மற்றும் அனைத்து உயர் அலுவலர்களுக்கு பாராட்டு தெரிவித்து, நடப்பு நிதி ஆண்டிலும் அதே முனைப்புடன் ஆக்கப்பூர்வமாக செயல்பட்டுஅரசுநிர்ணயித்துள்ள வருவாய் இலக்கினை அடைவதற்கு அனைத்து இணை ஆணையர்களும் சிறந்த முறையில் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) மொ.நா.பூங்கொடி, மற்றும் வணிகவரித்துறை உயர்அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வைத்தீஸ்வரன்கோவில் மகா மாரியம்மன் கோவில் சித்திரை திருவிழா

மயிலாடுதுறை, மே.21

சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவில் வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்திற்கு உட்பட்ட கீழத்தெருவில் மகா மாரியம்மன் கோவில் உள்ளது.

மிகவும் பழமை வாய்ந்த இந்த கோவிலின் சித்திரை திருவிழா காப்பு கட்டும் நிகழ்வுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்று இரவு வைத்தீஸ்வரன் கோவில் வர்த்தக சங்கம் சார்பில் சிறப்பு வழிபாடு நிகழ்ச்சி நடந்தது. இதனை ஒட்டி அம்மனுக்கு பல்வேறு மங்களப் பொருள்களால் அபிஷேகம் நடந்தது. இதையடுத்து மலர்களால் அலங்கரிக்கப்பட்டு அர்ச்சனைகள் நடந்தன. பின்னர் தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள், மேளதாளம் முழங்கிட அம்மன் வீதி உலா காட்சி நடந்தது.



வீதி உலாவின்போது பக்தர்கள் தங்கள் வீடுகள் முன்பு மாவினால் கோலமிட்டு, மாவிளக்கு, அர்ச்சனைகள் செய்து அம்மனை வழிபட்டனர்.

இதில் வர்த்தக சங்கத் தலைவர் கண்ணன், கௌரவத் தலைவர் சுப்பிரமணியன், செயலாளர் மதியழகன், பொருளாளர் ராமதாஸ், இணைப் பொருளாளர் சத்தியசீலன், நாடார் உறவின்முறை சங்கத் தலைவர் முருகேசன் நாடார் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழாவில் பங்கேற்ற ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# மின்கட்டணம் உயர்த்தும் முடிவை அரசு கைவிட வேண்டும் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தல்



சென்னை, மே.21

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

"தமிழகத்தில் உள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கான மின் கட்டணத்தை வரும் ஜூலை மாதத்திலிருந்து உயர்த்தப்போவதாக தி ஹிந்து தமிழ்திசை நாளிதழில் இன்று வெளியாகியுள்ள செய்தி, சாமானிய மக்களை பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. இது உண்மையான தகவலாக இருப்பின், திமுக அரசின் இந்த முடிவானது கடும் கண்டனத்திற்குரியது!

எதிர்க்கட்சியாக இருக்கையில் "தொட்டால் ஷாக் கடிக்கும் மின்கட்டணம் என பட்டி தொட்டியெல்லாம் பரப்புரை செய்த ஸ்டாலின், முதல்வராகப் பதவியேற்ற ஒரே மாதத்தில் மின் கட்டணமானது சராசரியாக 52% உயர்த்தப்பட்டது. இதனை தொடர்ந்து ஜூன் 2023, ஜூன் 2024 என இந்த இருண்ட திமுக ஆட்சியில் வருடாவருடம் உயர்த்தப்பட்டு வரும் மின்கட்டணத்தால் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்கள். சிறு வணிகர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள் என்பது அரசுக்கு தெரியாதா?

செயல் திறன் அதிகரித்தல், பெரிய வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகை வசூலித்தல், மற்றும் கசிவு குறைப்பு ஆகியவற்றின் மூலம் TANGEDCOவின் இழப்புகளைச் சரி செய்வதற்கு பதிலாக, திமுக அரசு மக்கள் தலையில் சுமையை தொடர்ந்து ஏற்றுவது நியாயமா? ஏற்கனவே திமுகவின் திறனற்ற ஆட்சியில் படாத பாடுபடும் தமிழக மக்கள் தொடர் விலையேற்றங்களாலும் வரி உயர்வினாலும் தங்கள் வாழ்வாதாரத்தையும் தொலைத்துவிட்டு வாழ வழி தெரியாமல் நிற்க வேண்டுமா? வாக்களித்த மக்களைவஞ்சிப்பதையே வாடிக்கையாக கொண்ட திமுக அரசு, தாம் என்ன செய்தாலும் மக்கள் சகித்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறதா?

2021 தேர்தலின் போது, "மாதக் கணக்கெடுப்பு முறையை பின்பற்றி மக்களின் மின் கட்டண சுமையை குறைப்போம் மற்றும் தமிழகத்தின் மின் பற்றாக்குறையை சமாளிக்க காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யப்படும் போன்ற திமுகவின் போலி வாக்குறுதிளை எல்லாம் காற்றில் பறக்க விட்டது

மற்றும் தற்சார்பு மின் உற்பத்தியில் கவனம் செலுத்தாமல் தனியாரை நம்பி தமிழகத்தைக் கடன் சுமையில் தத்தளிக்க விட்டது இவை தான் திமுக அரசின் நான்காண்டு கால சாதனைகள்.

இப்படி மின்கட்டண உயர்வு ஒரு புறம் மக்களை வாட்டி வதைக்கிறது என்றால், ஆவின் பால் விலை, சொத்து வரி (25%, 150% உயர்வு!), சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணம், கட்டிட அனுமதிக்கான கட்டணம், தொழில்முறை வரி என திமுக ஆட்சியில் அதிகரிக்கும் மற்ற விலைவாசிகளும் வரி உயர்வும் மக்களை விழி பிதுங்க வைக்கிறது.

வேடிக்கையான உண்மை என்னவென்றால், இந்த நான்காண்டு திமுக ஆட்சியில் மதுபானங்களின் விலையும் உயர்த்தப்பட்டு, டாஸ்மாக் கொழுத்தது மட்டுமல்லாமல், அதில் ஆட்சியாளர்களும் கொழுத்தார்கள் என இப்பொழுது எழுந்திருக்கும் ரூ. 1000கோடி டாஸ்மாக் மோசடி செய்தி சுட்டிக்காட்டுகிறது.

ஆகவே, மறுபடியும் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டால் அது மக்களை பெரும் அவதிக்கு உள்ளாக்கும் என்பதை உணர்ந்து, அப்படிப்பட்ட முடிவை உடனடியாக திமுக அரசு கைவிட வேண்டும். மீறி, விலையேற்றமானது அமலுக்கு வந்தால், மிகப்பெரிய போராட்டங்களை இந்த அரசு சந்திக்க நேரிடும் என எச்சரித்து கொள்கிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்கட்டண உயர்வு என்பது எவ்வகையிலும் ஏற்க இயலாதது முத்தரசன்

சென்னை, மே.21

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

"தமிழ்நாட்டில் வரும் ஜூலை மாதம் முதல் மின் கட்டணம் 3.16 சதவீதம் உயர்த்தப்படும் என்ற செய்தி வெளியாகியுள்ளன.

அஇஅதிமுக ஆட்சியில் ஜெ.ஜெயலலிதா முதலமைச்சர் பொறுப்பில் இருந்த வரை மத்திய அரசின் உதய் மின் திட்டத்தை ஏற்கவில்லை. கடுமையாக எதிர்த்து வந்தார். அவரது மறைவுக்கு பின்னர் எடப்பாடி கே.பழனிசாமி ஆட்சியில் 2017 ஆம் ஆண்டில் உதய் மின்திட்டத்தை ஏற்றுக் கொண்டனர். இதனால் மத்திய அரசின் நிபந்தனைகளை ஏற்க வேண்டிய கட்டாயத்தை எடப்பாடி அரசு ஏற்படுத்தி விட்டது. முன்னாள் அஇஅதிமுக பொதுச் செயலாளர், ஜெ.ஜெயலலிதா வலுவாக எதிர்த்து வந்த உதய் மின் திட்டத்தில் எடப்பாடி அரசு கையெழுத்து போட்டு, அவரது கட்சியின் கொள்கைக்கு துரோகம் செய்து, தமிழ்நாட்டு மக்களின் நலனை அடகு வைத்ததை தமிழ்நாடு ஒரு போதும் மன்னிக்காது.



உதய் மின் திட்டத்தை ஏற்றுக் கொண்டதால் ஆண்டுக்கு 6 சதவீதம் அல்லது ஆண்டின் முடிவில் நிலவும் பணவீக்கம் இதில் எது குறைவோ, அந்த அளவில் ஆண்டு தோறும் ஜூலை மாதம் மின்கட்டணம் உயர்த்த வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

இதன்படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்கடந்தமூன்று ஆண்டுகளாக மின்கட்டணத்தை தொடர்ந்து உயர்த்தி வருகின்றது. இதன் பாதிப்புகள் கடுமையாக ஏற்படுகின்றன.

மத்திய அரசின் மக்கள் விரோதக் கொள்கையால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து நிலைகளிலும் விலைவாசி உயர்ந்து, மக்கள் வாழ்க்கை சுமையை கூட்டி வருகின்றது. கடந்த 2023 ஆம் ஆண்டு 2.18 சதவீதமும், 2024 ஆம் ஆண்டு 4.83 சதவீதமும் மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. சிறு, குறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நிலைக் கட்டணத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மேலும் 3.16 சதவீத மின் கட்டண உயர்வு என்பது எவ்வகையிலும் ஏற்க இயலாதது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பரிந்துரைத்துள்ள மின்கட்டண உயர்வைதமிழ்நாடு அரசு ஏற்கக் கூடாது என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு முதலமைச்சரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை இணை இயக்குனர்கள் பணியிட மாற்றம்

சென்னை, மே.21

தமிழ்நாடு பள்ளிக் கல்வி பணியில் இணை இயக்குநர்கள் 6 பேருக்கு இடமாறுதல் அளிக்கப் பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

1. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இணை இயக்குநராக செயல்பட்டு வந்த ச.சுகன்யா, தனியார் பள்ளிகள் இயக்ககத்தின் இணை இயக்குநராக மாற்றப்பட்டுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்ககத்தில்மேல்நிலைக்கல்வி இணை இயக்குநராக செயல்பட்டு வந்த அ.ஞானகௌரி, இடைநிலை பள்ளிக்கல்வி இயக்ககத்தின் இணை இயக்குநராக மாற்றப் பட்டுள்ளார்.




3. பள்ளிக்கல்வி இயக்ககத்தின் இடைநிலை இணை இயக்குநர் ஆர்.பூபதி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (சிறப்பு திட்டங்கள்) இணை இயக்குநராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

4. தொடக்கக்கல்வி இயக்ககத்தின் இணை இயக்குநராக (நிர்வாகம்) செயல்பட்டு வந்த ச. கோபிதாஸ், பள்ளிக்கல்வி இயக்ககத்தின் (மேல்நிலைக் கல்வி) இணை இயக்குநராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

5. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் இணை இயக்குநர் (சிறப்புத் திட்டங்கள்) ஆர். சுவாமிநாதன், தொடக்கக் கல்வி இயக்ககத்தின் (நிர்வாகம்) இணை இயக்குநராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

6. தனியார் பள்ளிகள் இயக்ககத்தின் இணை இயக்குநர் எம்.ராமகிருஷ்ணன், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (நிர்வாகம்) இணை இயக்குநராக மாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

கவர்னரின் ஆணைப் படி இந்த ஆணை உடனடியாக நடைமுறைக்கு வருவதாக அரசு முதன்மை செயலாளர் சந்திரமோகன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

# கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி: உயர்நிலைக் குழுவுடன் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை




சென்னை, மே.21

2025 2026ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிவிப் பின்படி கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் பணி குறித்த உயர் நிலைக்குழுவின் ஆய்வுக் கூட்டம் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து உதயநிதி ஸ்டாலின் கேட்டறிந்தார்.

கூட்டத்தில் தலைமைச் செயலாளர் முருகானந்தம் பேசுகையில்,

மடிக்கணினி வழங்கும் திட்டத்தை செயல்படுத்த உயர்கல்வித் துறையின் மூலம் 22.4.2025 அன்று அரசாணை வெளியிடப் பட்டது. மேலும், இத்திட்டத்தை செயல்படுத்த அரசு உயர் அலுவலர்கள், அண்ணா பல்கலைக்கழகம், ஐ.ஐ.டி மெட்ராஸ், மத்திய அரசின் தேசிய தகவலியல் நிறுவனம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உள்ளிட்டவற்றின் தொழில்நுட்ப வல்லுநர்கள் இடம் பெற்றுள்ள தொழில்நுட்ப தரநிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப தரநிலைக் குழுவினர் இதுவரை 7 கூட்டங்கள் நடத்தி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ள மடிக்கணினியின் செயல்திறன், நினைவகத்தின் அளவு, மென்பொருள், மின்கலத்தின் (பேட்டரி) திறன், வன்பொருட்கள் உள்ளிட்ட தொழில்நுட்பச் சாதனங்களுக்கான விவரக்குறிப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் மென்பொருள் தொடர்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் புகழ் பெற்ற மென்பொருள் நிறுவனங்களுடன் ஆலோசனை செய்யப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக் குழுவினர் ஒப்பந்தப் புள்ளி ஆவணத்தை தயார் செய்து சமர்பித்தவுடன் ஒப்பந்தபுள்ளி தொடர்பான செயல்பாடுகள் விரைந்து மேற்கொள்ளப்படும். மேலும் மடிக்கணினிகளை கல்லூரி மாணவர்களுக்கு வழங்கிடும் பணிகளை விரைந்து மேற்கொள்ள விநியோகத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில்,

கல்லூரி பயிலும் மாணவர்களை திறன் மிக்க மாணவர்களாக உருவாக்கிடவும், அவர்கள் உயர் கல்வி கட்டாயம் பயில்வதை உறுதி செய்திடவும், நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகின்றார்.

தொழில் நுட்பத் திறனில் உலக அளவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் வகையில் 2025 2026ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை மாணவர்களிடம் விரைந்து கொண்டு சென்று சேர்த்திட அனைத்து அலுவலர்களும் தங்களுக்கான பணிகளை அர்பணிப்பு உணர்வுடன் விரைந்து மேற்கொள்ள வேண்டும்.


இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூர்: கழிவுநீர் தொட்டியில் விஷவாயு தாக்கி இருவர் பலி

திருப்பூர், மே.21


திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே கரைப்புதூரில் தனியாருக்குச் சொந்தான சாய ஆலை உள்ளது. இந்த ஆலையில் 70க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வழக்கம்போல் வேலை செய்து கொண்டிருந்தனர். இந்த சூழலில், 4 தொழிலாளர்கள் சுமார் 7 அடி ஆழமுள்ள சாயக்கழிவு நீர்த்தொட்டியை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அப்போது அவர்களை திடீரென விஷவாயு தாக்கியது. இதில் அவர்கள் 4 பேரும் மயக்கம் அடைந்தனர். அருகில் இருந்தவர்கள் அவர்களை மீட்டு, திருப்பூர் பல்லடம் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு இரு தொழிலாளர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். மேலும் இருவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.



உயிரிழந்தவர்களின் உடல்கள் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு உடற்கூராய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டது. பல்லடம் காவல் துறையினர் இந்த விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து சாய ஆலை உரிமையாளரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வீட்டின் சுவர் ஏறி குதித்து, கதவை உடைத்து நகை, பணம் கொள்ளை: 60 வயது மூதாட்டி கைவரிசை




திருப்பத்தூர், மே.21

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் வளையாம்பட்டு பகுதியை சேர்ந்தவர் முனுசாமி. கடந்த 2 நாட்களுக்கு முன் குடும்பத்துடன் வெளியே சென்றுள்ளார். இதனால், வீட்டில் யாரும் இல்லை என தெரிந்து கொண்ட மர்ம நபர்கள் பின்பக்க கதவை உடைத்து வீட்டின் உள்ளே சென்றுள்ளனர்.

வீட்டின் உள்ளறையில் பீரோவில் இருந்த 20 பவுன் நகைகள் மற்றும் ரூ.14 ஆயிரம் பணம் ஆகியவற்றை கொள்ளையடியத்து சென்றுள்ளனர். வீடு திரும்பிய முனுசாமி, கதவு உடைக்கப்பட்டு இருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார். உடனடியாக வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, நகைகள், பணம் கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது தெரிய வந்தது. இதுபற்றி வாணியாம்பாடி கிராம போலீசாரிடம் அவர் புகார் தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி போலீசார், தடய அறிவியல் மற்றும் கைரேகை நிபுணர்கள் உதவியுடன் விசாரணை மேற்கொண்டனர். இதில், பக்கத்து வீட்டில் இருந்த 60 வயது மூதாட்டி, முனுசாமி வீட்டில் யாரும் இல்லை என தெரிந்து கொண்டு, வீட்டின் சுவர் ஏறி குதித்து, உள்ளே சென்று 20 சவரன் நகைகள் மற்றும் 14 ஆயிரம் பணம் ஆகியவற்றை கொள்ளையடித்து உள்ளார்.

அதனை நகை கடைக்கு சென்று அடகு வைத்து, ரூ.3 லட்சத்து 25 ஆயிரம் பணமும் பெற்றுள்ளார். பகலிலேயே நடந்த இந்த சம்பவத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவுசெய்து மூதாட்டியை போலீசார்கைதுசெய்தனர். பின்னர், அவரைசிறையில் அடைத்தனர்.

# குடிபோதையில் நோ பார்க்கிங் பலகையை தூக்கி சென்ற மதுபிரியர்

ஈரோடு, மே.21

தமிழகத்தில் நாளுக்கு நாள் மதுபிரியர்கள் செய்யும் அட்டகாசங்கள் அதிகரித்து வருகிறது. குடிபோதையில் தங்களை மறந்து அவர்கள் பல சாகசங்களை செய்கின்றனர். இந்த காட்சிகள் வீடியோவாக எடுக்கப்பட்டு சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இந்த வீடியோக்களை அதிக பார்வையாளர்கள் ரசித்து பார்க்கின்றனர். ஒரு சிலர் கண்டனங்களும் தெரிவிக்கின்றனர்.



இந்தநிலையில் இது போன்ற சம்பவம் ஈரோட்டில் நடந்து உள்ளது. ஈரோடு கனி மார்க்கெட் முன்பு குடிபோதையில் ஒருவர் ரோட்டில் அங்கும் இங்கும் தள்ளாடியபடி சுற்றினார். பின்னர் அங்கு சாலையோரம் இருந்த வாகனம் நிறுத்தக்கூடாது (நோ பார்க்கிங்) என்ற அறிவிப்பு பலகையை தூக்கி கொண்டு தள்ளாடியபடி ரோட்டை கடந்து சென்றார். இந்த காட்சி தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

# அரசு பள்ளி அலுவலர்களுக்கான பணி நேரம் மாற்றம் பள்ளிக் கல்வித்துறை உத்தரவு

சென்னை மே.21

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகள் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அலுவலகங்களில்பணியாற்றும்அமைச்சு பணியாளர்களான உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்களுக்கான பணி நேரம், காலை 10 மணி முதல் மாலை 5.45 வரை இருந்தது. இந்த சூழலில், கடந்த 2023ம் ஆண்டு மே மாதம் அமைச்சு பணியாளர்களுக்கான பணி நேரம் காலை 9 மணி முதல் மாலை 4.45 மணி வரைஎனமாற்றிஅமைத்து உத்தரவிடப்பட்டது. இதற்கிடையில், பல்வேறு சங்கங்கள் அமைச்சு பணியாளர்களின் பணி நேர மாற்றம் உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறைக்கு கோரிக்கை விடுத்தனர். இந்த நிலையில், பள்ளிகள் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அலுவலகங்களில் பணிபுரியும் அமைச்சு பணியாளர்களின் பணி நேரம் மீண்டும் காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை மாற்றம் செய்யப்படுவதாக பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது. பணிநேரத்திற்கு பிறகு, வழக்கமான பணிகள் இல்லாமல், முக்கிய மற்றும் அவசர பணிகள் இருக்கும்போது மட்டும் கூடுதல் நேரங்களில் பணிகளை மேற்கொள்ளவும், விடுமுறை நாட்களில், முறைப்பணிக்கு வரிசையாக பட்டியலிட்டு அதன் படி பணியாளர்களை அலுவலகம் வரும்படி அலுவலக தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

# வீடு புகுந்து இளம்பெண்ணிடம் தவறாக நடந்த போலீஸ்காரர் கைது

திருவள்ளூர், மே.21

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த பழவேற்காடு நடுவூர்மாதாகுப்பம் பகுதியை சேர்ந்த மீனவர்கள் பழவேற்காடு ஏரியில் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். சில தினங்களுக்கு முன்பு ஏரியில் மின்பிடித்து கொண்டிருந்தபோது நடுவூர்மாதாகுப்பத்தை சேர்ந்த இரு தரப்பினரிடையே தகராறு ஏற்பட்டு மோதலாக மாறியது. இதில் 5 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து திருப்பாலைவனம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் மோதிக்கொண்டதால் அப்பகுதியில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க 24 மணி நேரமும் போலீசார் நடுவூர்மாதகுப்பத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில்,

சம்பவத்தன்று வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுகா வஞ்சியூர் பகுதியை சேர்ந்த சுதாகர் (வயது 24) என்ற போலீஸ்காரர் இரவு பணியில் ஈடுபட்டார். அப்போது அப்பகுதியில் வீட்டில் புழுக்கமாக இருந்ததால் மீனவர் ஒருவர்குடும்பத்துடன்வெளியேபடுத்துதூங்கிகொண்டு இருந்தார். வெளியே தூங்கிகொண்டு இருந்த 20 வயது இளம்பெண் நள்ளிரவில் தண்ணீர் குடிக்க வீட்டுக்குள் சென்றார். இதை நோட்டமிட்ட போலீஸ்காரர் சுதாகர் பின்னால் சென்று கதவை பூட்டி க்கொண்டு அந்த பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றதாக கூறப்படுகிறது.

அந்த பெண்ணின் அலறல் சத்தம் கேட்டு அவரது வீட்டார் ஓடி சென்றனர். உடனே போலீஸ்காரர் பக்கத்து அறைக்கு சென்று கதவை பூட்டிக்கொண்டார். இதுகுறித்து அந்த பெண்ணின் பெற்றோர் சக போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து போலீசார் அங்கு சென்று சுதாகரிடம் கேட்டபோது தண்ணீர் கேட்டு வந்ததாக கூறினார். இதுகுறித்து பெண்ணின் பெற்றோர் பொன்னேரி அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தனர்.

போலீசார் வழக்குப்பதிவு செய்து போலீஸ்காரர் சுதாகரை கைது செய்தனர். வேலியே பயிரை மேய்ந்தது என்ற பழமொழிக்கு ஏற்ப இரவு பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போலீஸ்காரர் இளம்பெண்ணிம் தவறாக நடந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீதான மோசடி வழக்கு வேறொரு கோர்ட்டுக்கு மாற்றம்

விருதுநகர், மே.21

விருதுநகர் அ.தி.மு.க. மேற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.டி. ராஜேந்திரபாலாஜி. கடந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது இவர் பால்வளத்துறை அமைச்சராக இருந்தார். அந்த சமயத்தில் ஆவினில் வேலை வாங்கி தருவதாக பல்வேறு நபர்களிடம் பல கோடி ரூபாய் மோசடி செய்ததாக அளித்த புகாரின் அடிப்படையில் கே.டி. ராஜேந்திர பாலாஜி உள்பட 7 பேர் மீது விருதுநகர் குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் ஊழல் மற்றும் மோசடி வழக்குகளுக்கான சிறப்பு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் இந்த வழக்கில் கடந்த மாதம் விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் 600 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை கோர்ட்டில் தாக்கல் செய்தனர். அதன்பின்பு கூடுதல் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப் பட்டது. அதன்பேரில் அந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது.



இந்தநிலையில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீதான இந்த வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட முதன்மை கோர்ட்டுக்கு மாற்றப்பட்டு உள்ளது. இனிமேல் ராஜேந்திர பாலாஜி மீதான இந்த வழக்கு விசாரணை மாவட்ட முதன்மை கோர்ட்டில்தான் நடக்கும். இந்த கோர்ட்டில்தான் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு மற்றும் சாத்தூர் ராமச்சந்திரன் மீதான ஊழல் வழக்குகளும் நிலுவையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டில் கொலை வழக்குகள் குறைந்துள்ளன டிஜிபி சங்கர் ஜிவால்



சென்னை, மே.21

தமிழ்நாட்டில் கொலை வழக்குகள் குறைந்துள்ளதாக டிஜிபி சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

"தமிழ்நாட்டில் காவல் துறை மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால், 2023 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் கொலை, காயம் மற்றும் கலவரங்கள் உள்ளிட்ட மனித உடலுக்கு எதிரான குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளன.

மேலும், கொலைகளின் நீண்டகால போக்கின் பகுப்பாய்வின் படி 2017 2020 ஆம் ஆண்டில், கொலை வழக்குகள் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரித்து, 2019 ஆம் ஆண்டில் 1745 வழக்குகளுடன் உச்சத்தை எட்டின. இருப்பினும், 2021 மற்றும் அதற்குப் பிறகு, கொலை வழக்குகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து குறைந்து வருகின்றன, 2024 ஆம் ஆண்டில் மிகக் குறைவாக கொலை வழக்குகள் (1563 வழக்குகள்) பதிவாகியுள்ளன.

உண்மையில், கடந்த 12 ஆண்டுகளில் எந்தவொரு ஆண்டையும் விட 2024 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன. கடந்த 2012 ஆம் ஆண்டில் மாதத்திற்கு சராசரியாக 161 கொலை வழக்குகள் பதிவாகியிருந்தாலும், இது 2024 ஆம் ஆண்டில் மாத சராசரியுடன் ஒப்பிடும் போது கொலை வழக்குகள் 130 ஆகக் குறைந்துள்ளன, இது மேலும் 2025 ஆம் ஆண்டில் (ஏப்ரல் வரை) மாதத்திற்கு 120 கொலை வழக்குகளாகக் குறைந்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில், காவல்துறை எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால், கடந்த 6 ஆண்டுகளில் மிகக் குறைந்த கொலை வழக்குகள் பதிவான 2024 ஆம் ஆண்டில், ரவுடி கொலைகளும் குறிப்பிட்ட அளவு குறைந்துள்ளன. 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் (ஜனவரி முதல் ஏப்ரல் வரை) கொலை வழக்குகள் குறைந்து வரும் போக்கின் தொடர்ச்சியாக, முந்தைய ஆண்டின் (2024) முதல் நான்கு மாதங்களில் 501 கொலைகளுடன் ஒப்பிடும்போது, 483 கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன.

திடீர் தூண்டுதல், குடும்ப தகராறுகள், திருமணத்தை தாண்டிய உறவு போன்றவற்றால் நிகழும் பிற வகையான கொலைகளைத் தடுப்பது கடினம் என்பதால், ரவுடி மற்றும் பழிவாங்கும் கொலைகளைக் கட்டுப்படுத்த காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகள் கொலைகளைக் குறைப்பதிலும், பிற வகையான மனித உடலுக்கு எதிரான குற்றங்களை குறைப்பதிலும் நல்ல பலனைத் தந்துள்ளன.

1. ரவுடிகளுக்கு எதிரான அதிகபட்சதண்டனைகள்: நீதிமன்ற விசாரணை முடியும் தருவாயில் உள்ள வழக்குகளில் தண்டனை கிடைக்கும் வாய்ப்புள்ள வழக்குகள் அடையாளம் காணப்பட்டு, தண்டனை பெறுவதற்காக வழக்கு விசாரணையை விரைவுபடுத்துவதை கண்காணிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.

2. திட்டமிட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் (OCIU) நெருக்கமான கண்காணிப்பானது ரவுடி மற்றும் பழிவாங்கும் கொலைகளைக் குறைப்பதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளது.

3. அதிக எண்ணிக்கையிலான (குண்டர்) தடுப்புக் காவல்கள். கடந்த 2024 ஆம் ஆண்டில், தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலானசரித்திரப்பதிவேட்டு ரவுடிகள் (3645) தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர். 2021 ஆம் ஆண்டுக்கு முன்பு அதிகபட்சமாக 2019 ஆம் ஆண்டில் 1929 சரித்திரப் பதிவேடு ரவுடிகள் கைது செய்யப்பட்டனர். இருப்பினும், 2021 ஆம் ஆண்டில் 2484 சரித்திரப் பதிவேடு ரவுடிகளும், 2022 ஆம் ஆண்டில் 3380, 2023 ஆம் ஆண்டில் 2832 மற்றும் 2024 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 3645 சரித்திரப் பதிவேடு ரவுடிகளும் குண்டர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் (ஏப்ரல், 2025 வரை), 1325 சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4. தற்போதைய செயல்பாட்டின் அடிப்படையில் கவனம் செலுத்துதல் மற்றும் பயனுள்ள கண்காணிப்பிற்க்காக சரித்திரப் பதிவேடு ரவுடிகளை மறுவகைப்படுத்திய பிறகு, A+ மற்றும் A பிரிவின் கீழ் உள்ள ரவுடிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இது 50% க்கும் அதிகமாகக் குறைந்துள்ளது. இது ரவுடிகள் மீது கவனம் செலுத்தவும் அவர்களை திறம்பட கண்காணிக்கவும் உதவுகிறது.

5. ஒவ்வொரு தீவிர செயல்பாடுடைய சரித்திரப் பதிவேடு ரவுடிக்கும் காவல் நிலைய சரகத்தில் DARE (Drive Against Rowdy Element) அதிகாரிகளை நியமித்தல். இந்த DARE அதிகாரிகள், ரவுடிகள் தொடர்பான சம்பவங்களைத் தடுக்க, அவர்களின் தற்போதைய நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பணியை மேற்கொள்கின்றனர்.

6. பழிவாங்கும் மற்றும் ரவுடிகள் தொடர்பான கொலைகளைத் தடுக்கவும், சிறைக்குள் அவர்களின் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பெறவும், சிறைச்சாலைகளில் ரவுடிகளை உன்னிப்பாகக் கண்காணிக்கின்றனர். பல சந்தர்ப்பங்களில், சிறைச்சாலைக்குள் ரவுடிகள் மற்றும் பழிவாங்கும் கொலைகளைச் செய்ய சதித்திட்டம் தீட்டப்படுகிறது.

ரவுடிகள் மற்றும் பிற சமூக விரோத சக்திகளுக்கு எதிரான இந்த முறையான, முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தமிழ்நாட்டில் பழிக்குப் பலி மற்றும் ரவுடி கொலைகளில் குறிப்பிடத்தக்க அளவு குறைந்து நல்ல பலனைத் தந்துள்ளன."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

21.5.2025

## திருவேங்கடம் அருகே சிறுவன் விஷம் குடித்து தற்கொலை

தென்காசி, மே.21

தென்காசி மாவட்டம் திருவேங்கடம் அடுத்துள்ள தெற்கு பாறைப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் விஜயகுமார். கூலி தொழிலாளி. இவருடைய மகன் அஜித்குமார் (16 வயது), 9ம் வகுப்பு வரை படித்து விட்டு பின்னர் பள்ளிக்கு செல்லவில்லை. தொடர்ந்து அஜித்குமார் வேலைக்கும் செல்லாமல் நண்பருடன் சேர்ந்து ஊர் சுற்றியதாக கூறப்படுகிறது. இதனை தந்தை விஜயகுமார் கண்டித்தார்.

இதனால் மனமுடைந்த அஜித்குமார் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் பூச்சிக்கொல்லி மருந்தை (விஷம்) குடித்து மயங்கி விழுந்து உயிருக்கு போராடினார். உடனே அவரை திருவேங்கடம் தனியார் மருத்துவமனையில் அனுமதித்து முதலுதவி சிகிச்சை அளித்தனர். பின்னர் அவரை மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனையில் அனுமதித்து தீவிர சிகிச்சை அளித்தனர்.

ஆனாலும் சிகிச்சை பலனின்றி அஜித்குமார் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து திருவேங்கடம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

## சென்னை: கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபருக்கு அடி உதை

சென்னை மே.21

சென்னை வில்லிவாக்கம் பகுதியைச் சேர்ந்த 18 வயது மாணவி ஒருவர், சென்னையில் உள்ள கல்லூரியில் படித்து வருகிறார். இவர் வீட்டில் இருந்து கோவிலுக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது வடமாநில வாலிபர் ஒருவர், கல்லூரி மாணவியிடம் பாலியல்சீண்டலில்ஈடுபட்டார். அதிர்ச்சி அடைந்த கல்லூரி மாணவி கூச்சல் போட்டதால் அங்கிருந்த பொதுமக்கள் ஓடிவந்து அந்த வாலிபரை மடக்கி பிடித்து, சரமாரியாக அடித்து உதைத்து வில்லிவாக்கம் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

விசாரணையில் அவர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த சுனில் ஜமாத் (24 வயது) என்பதும், வில்லிவாக்கத்தில் தங்கி, கட்டிட வேலை செய்து வருவதும் தெரிந்தது. இதுபற்றி வழக்குப்பதிவு செய்த போலீசார், சுனில் ஜமாத்தை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## ஊட்டியில் இளம்பெண்கள் உடை மாற்றுவதை வீடியோ எடுத்த வாலிபர் கைது



ஊட்டி, மே.21

மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்த 20 முதல் 25 வயது மதிக்கத்தக்க 5 இளம் பெண்கள், நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள தனியார் ஓட்டலில் உணவு பரிமாறுதல் உள்பட பல்வேறு வேலைகளில் சேர்ந்து பணியாற்றி வந்தனர். திருமணம் ஆகாத அவர்கள், ஊட்டி பிங்கர்போஸ்ட் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்தனர்.

இந்த நிலையில் சம்பவத்தன்று பணி முடிந்து வீடு திரும்பிய இளம்பெண்கள் உடை மாற்றி உள்ளனர். அப்போது மர்ம நபர் ஒருவர் மறைந்திருந்து வீடியோ எடுப்பது தெரிய வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த இளம்பெண்கள் சத்தம் போட்டனர். இதுகுறித்து புதுமந்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். இதில் வடமாநில இளம்பெண்கள் தங்கி இருந்த வாடகை வீட்டின் அருகில் மற்றொரு வீட்டில் வசித்து வந்த அதே பகுதியை சேர்ந்த கிரிதரன் (வயது 35) என்பவர் இளம்பெண்களை செல்போனில் வீடியோ எடுத்தது தெரியவந்தது. அவர் ஏற்கனவே திருமணம் ஆனவர். நாய்கள் வாங்கி விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வந்தார்.

கடந்த சில நாட்களாக கிரிதரன் தனது வீட்டிற்கு செல்லும் போது, ஜன்னல், கதவு வழியாக இளம்பெண்களை தொடர்ந்து நோட்டமிட்டு வந்து உள்ளார். பின்னர் அவர்கள் உடை மாற்றுவதை செல்போனில் வீடியோ எடுத்தது விசாரணையில் தெரியவந்தது. இதுதொடர்பாக பெண்கள் வன்கொடுமை சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து, கிரிதரனை போலீசார் கைது செய்தனர். மேலும் அவரது செல்போனை கைப்பற்றி, வேறு யாரையும் ஆபாச வீடியோ எடுத்து உள்ளாரா? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்தியாவில் ரூ.12,800 கோடி முதலீடு செய்த பாக்ஸ்கான் நிறுவனம்




புதுடெல்லி, மே.21

ஆப்பிள் போன் உற்பத்தி நிறுவனமான பாக்ஸ்கான் இந்தியாவில் தனது உற்பத்தி தளத்தை சென்னை அருகே அமைத்து உலக நாடுகளுக்கு ஆப்பிள் போன்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து வருகிறது. 202425 நிதியாண்டில் பாக்ஸ்கான் நிறுவனம் இந்தியாவில் தனது வருவாயை இரட்டிப்பாக்கி சுமார் ரூ.1.7 லட்சம் கோடி வருமானம் ஈட்டியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், ஆப்பிள் நிறுவனம் இந்தியாவில் ஐபோன்களின் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டுள்ளது. இதையடுத்து பாக்ஸ்கான் நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள தனது யூசான் டெக்னாலஜி நிறுவனத்தில் கடந்த 5 நாட்களில் ரூ.12 ஆயிரத்து 800 கோடியை முதலீடு செய்து உள்ளது.

## இன்றைய ராசி பலன்கள் (21.5.2025)

மேஷம்: இன்றைய நாள் சவால்களுடன் இருக்கும். பொறுமையுடன் செயல்படுங்கள்.

ரிஷபம்: பணியிடத்தில் முன்னேற்றம் காணலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

மிதுனம்: புதிய வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால், சிந்தித்து முடிவெடுக்கவும்.

கடகம்: உணர்ச்சி மேலாண்மை முக்கியம். குடும்பத்தில் சுமுகம் தேவை.

சிம்மம்: தொழிலில் முன்னேற்றம். காதல் வாழ்க்கையில் இனிமை காண்பீர்கள்.

கன்னி: சொத்து லாபம் மற்றும் திருமண யோகம். முக்கிய முடிவுகள் சாதகமாக அமையும்.

துலாம்: பணியிடத்தில் சவால்கள். நிதானமாக செயல்படுங்கள்.

விருச்சிகம்: புதிய முயற்சிகளில் வெற்றி. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

தனுசு: தொழில் முன்னேற்றம், வருமானம் அதிகரிப்பு, சந்தான யோகம்.

மகரம்: சுயநலத்தை தவிர்த்து, குழு பணிகளில் ஈடுபடுங்கள்.

கும்பம்: புதியவாய்ப்புகள்கிடைக்கும். ஆனால், சிந்தித்து முடிவெடுக்கவும்.

மீனம்: முதலீட்டில் லாபம், ஆன்மீக பயணம், வேலை வளர்ச்சி.

## மதுரை: சுவர் இடிந்து விழுந்ததில் சிறுவன் உள்பட 3 பேர் பலி



மதுரை, மே.21

மதுரையில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால், வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டு, மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர். இந்நிலையில், திருப்பரங்குன்றம் அருகே வலையங்குளம் கிராமத்தில் மழையால் பல்வேறு இடங்களில் நீர் தேங்கி இருந்தது. இதனை முன்னிட்டு, அந்த பகுதியில் மின் தடையும் ஏற்பட்டது. இதனால், வீட்டில் இருந்தவர்களில் சிலர் வெளியே வந்து அமர்ந்து பேசி கொண்டு இருந்துள்ளனர். இதன்படி, நேற்றிரவு 7 மணியளவில் வீட்டின் வாசலில் அமர்ந்து அம்மா பிள்ளை என்பவர், அவருடைய பக்கத்து வீட்டில் வசித்த வெங்கட்டி அம்மாளுடன் பேசிக்கொண்டு இருந்திருக்கிறார். அப்போது, அம்மா பிள்ளையின் பேரன் வீரமணியும் (வயது 10) உடன் இருந்துள்ளார். இந்நிலையில் மழையால், வீட்டின் ஒரு பக்க சுவர் சுவர் இடிந்து விழுந்தது. சுவரின் இடிபாடுகள், இந்த 3 பேரின் மீது விழுந்ததில் அவர்கள் 3 பேருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. இதில் வெங்கட்டி சிறிது நேரத்திலேயே உயிரிழந்து விட்டார். மற்ற 2 பேரும் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அவர்கள் இருவரும் இன்று உயிரிழந்தனர். இதனால், சுவர் இடிந்து விழுந்த சம்பவத்தில் சிக்கி ஒரே தெருவில் 3 பேர் பலியாகி உள்ளனர்.

## தொடர்ந்து சரியும் டிப்ளமோ மாணவர் சேர்க்கை: நடப்பு கல்வியாண்டில் 15 பாலிடெக்னிக் கல்லூரிகள் மூடல்



சென்னை, மே.21

தமிழ்நாடு உயர்கல்வித்துறையின் தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தின் கீழ் 56 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள், 32 அரசு உதவி பெறும் கல்லூரிகள், 350க்கும் அதிகமான தனியார் பாலிடெக்னிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதில் அரசு கல்லூரிகளில் 18 ஆயிரம் டிப்ளமோ படிப்பு இடங்கள் உள்பட மொத்தம் 1½ லட்சம் இடங்கள் உள்ளன. டிப்ளமோ படிப்பின் மீதான ஆர்வம் குறைந்து வருவதால், கடந்த சில ஆண்டுகளாகவே, பாலிடெக்னிக் மாணவர் சேர்க்கை சரிவை சந்தித்து வருகிறது.


02425ம் கல்வியாண்டு பாலிடெக்னிக் மாணவர் சேர்க்கையை பொறுத்தவரையில், 1½ லட்சம் இடங்களில், அரசு கல்லூரிகளில் 12 ஆயிரம் இடங்கள் உள்பட மொத்தம் 58 ஆயிரத்து 426 இடங்கள் மட்டுமே நிரம்பின. மீதம் 91 ஆயிரத்துக்கும் அதிகமான இடங்கள் காலியாகின. டிப்ளமோ படிப்புகளில் குறைந்து வரும் மாணவர் சேர்க்கை, தொழில்நுட்ப கல்வி இயக்ககத்திற்கு பெரிய சவால்களை ஏற்படுத்தி உள்ளது.

பாலிடெக்னிக் படிப்பில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க தொழில்நுட்ப கல்வி இயக்ககம் பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்து வருகிறது. புதிய வகையான படிப்புகள் அறிமுகம், தொழில்நுட்ப பயிற்சிகள் ஆகியவற்றை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், டிப்ளமோ படிப்பில் மாணவர் சேர்க்கை தொடர்ந்து குறைந்து வருவதன் எதிரொலியாக தமிழகத்தில் இயங்கும் தனியார் பாலிடெக்னிக் கல்லூரிகளில், 15 கல்லூரிகள் நடப்பு கல்வியாண்டு முதல் மூடப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதற்கான அனுமதி கோரி, சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகள் தொழில்நுட்ப கல்வி இயக்ககத்துக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதில் சில கல்லூரிகள், 202526ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கையில் மட்டும் பங்கேற்காமல், பிற ஆண்டுகள் படிக்கும் மாணவர்களின் படிப்பு நிறைவடையும் வரை கல்லூரிகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளன. இன்னும் சில கல்லூரிகளோ, மாணவர்களை, அருகாமையில் உள்ள வேறு கல்லூரிகளுக்கு மாற்றி, கல்லூரிகளை மூடவும் திட்டமிட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. மாணவர் சேர்க்கை சரிவு காரணமாக கடந்த 202425ம் கல்வியாண்டில் 17 பாலிடெக்னிக் கல்லூரிகள் மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் இணையும் 'குடும்பஸ்தன்' பட கூட்டணி




தமிழ் சினிமாவில் 'ஜெய் பீம், லவ்வர், குட் நைட்' போன்ற படங்களில் நடித்து பிரபலமானவர் மணிகண்டன். இவரது நடிப்பில் கடந்த ஜனவரி மாதம் 24ந் தேதி வெளியான படம் 'குடும்பஸ்தன்'. இப்படத்தை சினிமாக்காரன் நிறுவனம் தயாரிப்பில் நக்கலைட்ஸ் யூடியூப் இயக்குனர் ராஜேஷ்வர் காளிசாமி இயக்கியுள்ளார்.

இந்த படத்தில் மணிகண்டன் உடன் இணைந்து சான்வி மேக்னா, குரு சோமசுந்தரம், ஆர் சுந்தர்ராஜன் உள்ளிட்டோர் நடித்திருந்தனர். மிடில் கிளாஸ் குடும்பத்தில் இருக்கும் ஒரு இளைஞனின் வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களை அடிப்படையாக கொண்டு உருவான இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. ரூ.30 கோடிக்கும் அதிகமாக வசூல் இப்படம் ஓ.டி.டி.யிலும் நல்ல வரவேற்பை பெற்றது.

அதனை தொடர்ந்து 'குடும்பஸ்தன்' பட கூட்டணி மீண்டும் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதாவது, நடிகர் மணிகண்டன் மற்றும் இயக்குனர் ராஜேஷ்வர் காளிசாமி நேரில் சந்தித்து புதிய படம் தொடர்பாக பேசியுள்ளனராம். இவர்களது கூட்டணியில் உருவாக உள்ள புதிய படம் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் இதில் நடிக்க உள்ள மற்ற நடிகர்கள் குறித்த விவரங்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆசாதி படத்தின் டிரெய்லர் வெளியீடு




பிரபல மலையாள நடிகர் ஸ்ரீநாத் பாசி. இவர் '22 பீமேல் கோட்டயம்', 'உஸ்தாத் ஓட்டல்', 'கும்பளங்கி நைட்ஸ்', 'வைரஸ்' உட்பட பல படங்களில் நடித்துள்ளார். 'மஞ்சுமெல் பாய்ஸ்' படத்தில் நடித்து தமிழ் ரசிகர்களின் மத்தியில் பிரபலமானவர் நடிகர் ஸ்ரீநாத் பாசி.

இவர் தற்போது மருத்துவம் தொடர்பான திரில்லர் கதைக்களத்தில் உருவாகியுள்ள 'ஆசாதி' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தினை ஜோஜு ஜார்ஜ் இயக்கியுள்ளார். இதில் விஜயகுமார், ரவீனா ரவி, டிஜி ரவி, ராஜேஷ் சர்மா மற்றும் பலர் நடித்துள்ளனர். லிட்டில் க்ரூ புரொடக்ஷன் சார்பில் பைசல் ராஜா இப்படத்தை தயாரித்துள்ளார். இந்த படத்தின் தமிழ்நாட்டு வெளியீட்டு உரிமையை சபையர் ஸ்டுடியோஸ் கைப்பற்றியுள்ளது.

திரில்லர் கதையில் உருவாகி உள்ள இப்படம் வருகிற 23ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிலையில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது.


## 'பூத் பங்களா' படப்பிடிப்பு நிறைவு அக்சய் குமார் பகிர்ந்த வீடியோ வைரல்

இயக்குநர் மணிவண்ணனிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர் சுந்தர். சி. மணிவண்ணன் இயக்கிய வாழ்க்கைச் சக்கரம் திரைப்படத்தில் காவலராக நடிப்பில் அறிமுகமானார். பின், 1995ம் ஆண்டு வெளியான 'முறை மாமன்' படத்திலிருந்து இயக்குநராக சினிமாவில் தன் பயணத்தைத் துவங்கினார். தொடர்ந்து, 90களின் இறுதிக்குள் உள்ளத்தை அள்ளித்தா, மேட்டுக்குடி, அருணாச்சலம் உள்ளிட்ட வெற்றிப்படங்களைக் கொடுத்தார். அதன்பின், தலைநகரம், வீராப்பு, சண்டை, ஆயுதம் செய்வோம் என தொடர்ந்து நாயகனாக நடித்து அதில் வெற்றியும் பெற்றார். நகரம் திரைப்படம் விமர்சகர்களிடையே நல்ல பாராட்டுகளையும் பெற்றது. இதற்கிடையே, திரைப்படங்களையும் இயக்கிவந்தார். 2000க்குப் பின் வின்னர், கிரி, அன்பே சிவம், கலகலப்பு உள்ளிட்ட பல வெற்றிப்படங்களையும் இயக்கினார்.

முக்கியமாக, அரண்மனை என்கிற பேய் படத்தின் 4ஆம் பாகம் வரை இயக்கி வசூல் ரீதியாகவும் அவற்றை வெற்றிப்படங்களாக மாற்றினார். தற்போது, நயன்தாரா நாயகியாக நடிக்கும் மூக்குத்தி அம்மன் 2 படத்தை இயக்கி வருகிறார். அரண்மனை 5 படத்திற்கான முன்தயாரிப்புப் பணிகளில் சுந்தர். சி ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், சுந்தர். சி திரைத்துறைக்கு வந்து 30 ஆண்டுகள் நிறைவடைந்ததால் சிறப்பு போஸ்டர் வெளியிட்டுள்ளனர். சினிமாவில் 10 ஆண்டுகளைக் கடப்பதே பெரிய விஷயமாகப் பார்க்கப்படும் காலத்தில் மிகச் சிலரே நீண்டகாலம் தாக்குப்பிடிக்கின்றனர். அப்படி, தன் நகைச்சுவையான கதைக்களத்தை உறுதியாக நம்பி தொடர்ந்து பொழுதுபோக்கு திரைப்படங்களைக் நிறைவுசெய்தது திரைத்துறையினரிடம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. சுந்தர் சி திரைத்துரையில் கால் பதித்து 30 ஆண்டுகளை நிறைவு செய்ததை அடுத்து, சிறப்பு போஸ்டர் வெளியிட்டு 'மூக்குத்தி அம்மன் 2' படக்குழு வாழ்த்து தெரிவித்துள்ளது.

## ஐ.பி.எல் கிரிக்கெட்: 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் லக்னோவை வீழ்த்தி ஐதராபாத் வெற்றி



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் இன்று நடைபெற்ற 61வது லீக் ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற ஐதராபாத் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த லக்னோ அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மிட்செல் மார்ஷ் மார்க்ரம் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் சிறப்பாக விளையாடினர். முதல் விக்கெட்டுக்கு 115 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. அதிரடியாக விளையாடிய மார்ஷ் 65 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கேப்டன் பண்ட் 7 ரன்களில் நடையை கட்டினார்.

சிறப்பாக ஆடி வந்த மார்க்ரம் 61 ரன்களில் ஹர்ஷல் படேல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஆயூஷ் பதோனி 3 ரன்களில் அவுட்டானார். இறுதி கட்டத்தில் நிக்கோலஸ் பூரன் (45 ரன்கள்) அதிரடியாக விளையாடி லக்னோ வலுவான நிலையை எட்ட உதவினார். அவர் இறுதி ஓவரில் ரன் அவுட் ஆனார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் லக்னோ அணி 7 விக்கெட்டுகளை இழந்து 205 ரன்கள் எடுத்தது. கடைசி பந்தில் ஆகாஷ் தீப் சிக்சர் அடித்து அணி 200 ரன்களை எட்ட உதவினார். ஐதராபாத் தரப்பில் அதிகபட்சமாக எஷான் மலிங்கா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து 206 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் ஐதராபாத் அணி களமிறங்கியது.

அந்த அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய அதர்வா டெய்ட் 13 ரன்களில் வெளியேறினார். மற்றொரு தொடக்க வீரர் அபிஷேக் ஷர்மா எதிரணியின் பந்து வீச்சை வெளுத்து கட்டினார். 18 பந்துகளில் அரைசதத்தை நிறைவு செய்த அபிஷேக் ஷர்மா 59 ரன்களில் (20 பந்து, 4 பவுண்டரி, 6 சிக்சர்) பந்தை தூக்கியடித்து கேட்ச் ஆனார்.

அடுத்து வந்த வீரர்களும் கணிசமான பங்களிப்பை அளித்ததால் சிரமமின்றி ஐதராபாத் அணி இலக்கை அடைந்தது. இஷான் கிஷன் 35 ரன்களிலும், ஹென்ரிச் கிளாசென் 47 ரன்களிலும் அவுட்டாகினர். காமிந்து மென்டிஸ் 32 ரன்கள் எடுத்திருந்தபோது காயத்தால் பாதியில் பெவிலியன் திரும்பினார்.

இந்த நிலையில் ஐதராபாத் அணி 18.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 206 ரன்கள் குவித்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அனிகெட் வர்மா (5 ரன்கள்), நிதிஷ்குமார் ரெட்டி (5 ரன்கள்) களத்தில் இருந்தனர். ஏற்கனவே அடுத்த சுற்று வாய்ப்பை பறிகொடுத்து விட்ட ஐதராபாத்துக்கு இது 4வது வெற்றியாகும்.

கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டிய நெருக்கடியில் களம் கண்ட லக்னோ அணி இந்த தோல்வியின் மூலம் அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து வெளியேறியது. அந்த அணிக்கு இது 7வது தோல்வியாகும். இதுவரை குஜராத் டைட்டன்ஸ், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ், பஞ்சாப் கிங்ஸ் ஆகிய அணிகள் அடுத்த சுற்றுக்கு (பிளேஆப்) தகுதி பெற்றுள்ளன. எஞ்சிய ஒரு பிளேஆப்சுற்று இடத்துக்கு மும்பை, டெல்லி அணிகள் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

## மார்க்ரம், மார்ஷ் அதிரடி.. ஐதராபாத்துக்கு சவாலான இலக்கு நிர்ணயித்த லக்னோ

ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெற்று வரும் 61வது லீக் ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் விளையாடி வருகின்றன. இதில் டாஸ் வென்ற ஐதராபாத் அணியின் கேப்டன் கம்மின்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த லக்னோ அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மிட்செல் மார்ஷ் மார்க்ரம் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் சிறப்பாக விளையாடினர். முதல் விக்கெட்டுக்கு 115 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் இந்த ஜோடி பிரிந்தது. அதிரடியாக விளையாடிய மார்ஷ் 65 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கேப்டன் பண்ட் 7 ரன்களில் நடையை கட்டினார். சிறிது நேரத்திலேயே சிறப்பாக ஆடி வந்த மார்க்ரம் 61 ரன்களில் ஹர்ஷல் படேல் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஆயூஷ் பதோனி 3 ரன்களில் அவுட்டானார்.

இறுதி கட்டத்தில் நிக்கோலஸ் பூரன் (45 ரன்கள்) அதிரடியாக விளையாடி லக்னோ வலுவான நிலையை எட்ட உதவினார். அவர் இறுதி ஓவரில் ரன் அவுட் ஆனார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் லக்னோ அணி 7 விக்கெட்டுகளை இழந்து 205 ரன்கள் குவித்துள்ளது. கடைசி பந்தில் ஆகாஷ் தீப் சிக்சர் அடித்து அணி 200 ரன்களை எட்ட உதவினார். ஐதராபாத் தரப்பில் அதிகபட்சமாக எஷான் மலிங்கா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து 206 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற சவாலான இலக்கை நோக்கி ஐதராபாத் களமிறங்க உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.